திரு. எம். சுரேந்திரன் : அரசாங்கத்தினல் அங்கீகரிக்கப்பட்ட கெய்டுகள் நியமிக்கப்படுகிறபோது அவர்கள் அதற்குள்ள முக்கியமான தகுதிகள் உள்ளவர்களாக இருப்பது மிக அவசியம். நாட்டின் எந்தப் பகுதியில் இருந்து வருகிறவர்களுக்கும் விளக்கிச் சொல்வதற்கு அவர்களுக்குத் தகுதியிருந்தால்தான் அந்த அந்தஸ்தைப் பெற முடியும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது இந்தி தேவையில்லை என்று சொன்னது—அவருடைய கணக்குத் தவருக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். வருங்காலத்திலாவது இதைக் கணக்கில் கொண்டு அவர்களுக்கு இந்தி மொழியிலும் பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நான் ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம், தமிழ் படித்தவர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்படுகிற பயிற்சித் திட்டம் பற்றித்தான் சொன்னேன்.

திரு. நாரம்புநாதசுவாமி கோயில் திருப்பணி

*507 வின—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்தில் உள்ள திரு. நாரம்புநாதசுவாமி கோவில் திருப் பணிக்கான அடிக்கல் எப்போது நாட்டப்பட்டது ?

(இ) திருப்பணி தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 15—4—1970.

(இ) இன்னும் திருப்பணி வேலை துவங்கப்படவில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, 1970 இல் திருப்பணி வேலை துவங்கப்பட்டாலும் கூட, அந்த மதிப்பீட்டுக்கான அனுமதி பெறப்படவில்லை. 20—5—73 இல் தான் மதிப்பீட்டுக்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள் கடந்த ஆகஸ்டு மாதம் முதல் திருப்பணிக் குழு வசூல் செய்வதில் இறங்கி யிருக்கிறார்கள். ஆகஸ்டு திங்களில் இருந்துதான் வேலை துவக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.